# JAMAAT UL SAHIH AL ISLAM – TAMIL NADU



ஜுமுஆ பேருரை

தலைப்பு :

## அல்லாஹ்வின் பண்புக்கூறுகள் (பகுதி – 2)

**28 FEBRUARY 2020**

**(04 Rajab 1441 AH )**

ஹஸ்ரத் கலீப்.ஃ.த்துல்லாஹ்

முனீர் அஹ்மது அஸீம் (அலை)

வெளியீடு

அமீர்,

ஜமா அத் தமிழ்நாடு

**Phone No :- 917502272774**

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# The Signs of Allah (Pt.2 )

## அல்லாஹ்வின் பண்புக்கூறுகள் (பகுதி 2)

உலகனைத்திலும் உள்ள தனது தோழர்களுக்கும் மற்றும் எல்லா முஸ்லீம்களுக்கும் ஸலாத்தினைத் தெரிவித்துக்கொண்டு, தஷஹுஉத், தஅவ்வுசு மற்றும் அல்.ஃ.பாத்திஹா ஓதியபிறகு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் ஜுமா பேருரையியை நிகழ்த்தினார்கள்.

‘அல்லாஹ்வின் அருளால் , கடந்த வாரம் நான் அல்லாஹ்வின் பண்புகளைப் பற்றிய எனது சொற்பொழிவைத் தொடங்கினேன், மேலும்,இன்றும் இதேத் தலைப்பில் தொடர தவ்ஃபீக் வழங்கியதற்காக அல்லாஹ்வுக்கு நான் மிகவும் நன்றி கூறுகின்றேன். கடந்த வெள்ளிக்கிழமை சொற்பொழிவின் பக்கம் நீங்கள் செல்லும்போது, அல்லாஹ்வைப் பற்றி ‘ஹக்’ என்று உறுதியான வார்த்தைகளில் குறிப்பிடப்படவில்லை என்பதை நீங்கள் நன்கு புரிந்துகொள்வீர்கள், ஆனால் உண்மையில் நீங்கள் அவ னுடைய பண்புகளைக் கூர்ந்து ஆய்வு செய்யும் போது தான், உண்மை(யும்-அதாவது ‘ஹக்’ கும்) அதில் அடங்கியுள்ளது (என்பது புலனாகும்). புகழின் பார்வையில் (இருந்து நோக்கினாலும்), ஒருவர் அல்லாஹ்வைப் பற்றியும் , அல்லாஹ்விடமிருந்து

[அதாவது அல்லாஹ் தொடர்பாக] ஒரு பொய்யைக் கூட மனதில் எண்ணி விட முடியாது.

மக்கள் அதிகமாக பொய் பேசுவதற்குரிய இரண்டாவது காரணம் பேராசையாகும். செல்வம் மற்றும் சொத்து விஷயங்கள் அல்லது கடன் கொடுத்தல் மற்றும் திருப்பிச் செலுத்து கின்ற வழக்குகள் , கடன் பாக்கி (சம்பந்தப்பட்ட)வழக்குகள் போன்ற பல வழக்குகளு ம் [நீதிமன்றத்தில்] ந டந்து கொண்டிருக்கின்றன. ( இப்படிப்பட்ட)இந்த வியாபாரத்தின் பெரும்பகுதி யானது மக்கள் பேராசையின் காரணமாக் கூறுகின்ற பொய்களின் விளைவாகும்.

[இப்போது] நாம் நாட்ட ளவில் பார்ப்போம்.அதிகாரத்திற்கான தாகம் காரணமாக, அதிகாரத்திற்கான ஒருப் பேராசையின் காரணமாக , அரசியல்வாதிகள் ஆட்சிக்கு வருவதற்காக அனைத்து வகையான வாக்குறுதிகளையும் அளிக்கிறார்கள் என்பதை நீங்கள் காண்கிறீர்கள் , (அவர்களது) இந்த வேட்கையினால் , தேர்தல் பிரச்சாரத்தின்போது ஏராளமான பொய்கள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன ,அங்கு,ஒரு கட்சி மற்ற கட்சியை விமர்சிக்கும் போது , அதன் மீது சேற்றை வீசுகின்றது(அதாவது அம்மரியதை செய்கிறார்கள் மேலும், அதில் அனைத்து மக்களும் ஈடுபடுகின்றனர்], மேலும் அனைத்து வகையான நேர்மையற்ற செயல்களையும் (அக்கட்சிகள்) செய்கின்றன.பெரும்பாலும் தேர்தல்களும் கூட நடத்தப்படுகின்ற (அத்தகைய) நாட்டிலும் கூட தவறான நடைமுறைகளும் ,மோசடிகளும் நடைபெறுகின்றன. மேலும் இவைகளனைத்தும் சண்டைக்கும் , சீர்குலைவிற்குமான வழி யைத் திறக்கின்றன. அரசியல் கட்சிகள் தங்களது எதிரணியினர் மீது சேற்றை அள்ளி வீசுகின்றன, அவர்கள் மற்ற கட்சிகளைச் சந்தித்து, எதிரிகள் ஆட்சிக்கு வராமல் கவனமாகப் பார்த்துக்கொள்ளும்படியான அத்தகைய தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்கிறார்கள். (ஆட்சி) அதிகாரத்திற்கான இந்த வேட்கையில், வாக்காளர்களிடத்தில் வாக்குறுதிகள் வழங்கப்படுவதுடன் பல பொய்களும் கூட

கூறப்படுகின்றன.நாம் கூறுவது போல் , இவைகளனைத்தும் பேராசையின் விளைவாகும்,(அதாவது) அதிகாரத்தைப் பிடிக்க வேண்டும் ; அதிகாரத்தில் இருக்க வேண்டும் ,(மக்களின் பணத்தை வைத்து) கேளிக்கையாக( உல்லாசமாக) இருக்கவேண்டும் என்பதாகும்.. இந்த அரசியல்வாதிகள் ,அவர்களது பேராசையின் காரணமாக மக்களை ஏமாற்றியும் , அவர்களிடத்தில் பொய்யும் கூறுகின்ற போது,(வரவிருக்கும்) ஐந்து ஆண்டுகளில் எல்லாவற்றிலும் (மேலாக)இம்மக்களே இன்னும் அதிகமான துன்பங்களை அனுபவிக்கின்றார்கள்.

இப்போது, எல்லாவற்றையும் சொந்தமாக க் கொண்டுள்ளவனும் , எவரையும் சார்ந்து நிற்காதவனும் , அதற்கெதிரில்,எல்லோரும் அவனையே சார்ந்துள்ள ஒரு ஜீவன் உண்டெனி ல்,அ(ப்படிப்பட்ட)வனுக்கு பொய் கூற வேண்டிய அவசியம் தான் என்ன ?அவன் ஏற்கனவே பிரபஞ்சத்தின் எஜமானனாகவும் இருக்கின்ற காரணத்தினாலும் பேராசையின் தன்மை அல்லது எண்ணம் முற்றிலும் அகற்றப்படுகிறது..

அதேப் போன்றே மற்ற பண்புகளை ப் பற்றியும் கூட நீங்கள் சிந்திக்க முடியும். நமக்கு அறிவுரை வழங்கியவாறு பரிசுத்த குர்ஆன் , ஒருவருக்கொருவர், (அது) நம்முடையதாகவே இருந்தாலும் கூட தவறான வழிகளில் பொருட்களை விழுங்கக்கூடாது என்பதை நமக்குப் புரிய வைக்கின்றது. இங்கு பயன்படுத்தப்படும் வார்த்தை ‘பாத்தில்’ என்பதாகும்.மேலும் அது பல அர்த்தங்களைக் கொண்டுள்ளது , ஆனால் பொய்கள் என்பதே அதன் முதன்மை அர்த்தமாகும்.எனவே,அதன் பொருளானது நீங்கள் பொய் கூறலாகாது என்பதும் மற்ற மக்களின் பொருட்களை விழுங்கக் கூடாது என் பதுமாகும். அல்லாஹ் ( ஸுப்ஹ)வால் தடைசெய்யப்பட்டுள்ள வழிமுறைகளின்படி நீங்கள் பொருட்களை விழுங்க லாகாது என்பதும் கூட இதன் பொருளாகும். நீங்கள் ஹராமான (சட்டவிரோதமான) வற்றையெல்லாம் பயன்படுத்தக்கூடாது.

எனவே இரண்டு நிலைகளிலும் அதன் மு தன்மையான பொருள் பொய் பேசுதல் என்பதாகும்.இப் பொய்யின் காரணமாக நீங்கள் ஹராமான பொருட்கள், தீங்கு விளைவிக்கும் விஷயங்களை பயன்படுத்துகின்றீர்கள். உண்மையில் இது பேராசையுடன் தொடர்புடையதா கும்.இந்த பேராசை ஒரு நபரை நேர்மையற்றவராகவும், இன்னும் அவரைப் பற்றி மக்களு ம் கூட மோசமான தோற்றத்தையேக் கொண்டு விடுகின்றனர். அவர் எங்கு சென்றாலும் ,மக்கள் அவரைப் பற்றி மோசமாகவேப் பேசுவார்கள்.அவரது கெட்ட செயல்களின் மூலமும்,அவர் கொண்டுள்ள பேராசையி னாலும், அவரை இவ்வுலகிலும் அது போன்றே மறுமையிலும் மிகுந்த அவமானத்திற்கே அழைத்துச் சென்றுவிடும்.இறுதியில்,அவருக்கு இந்த பூமியோ,வானமோ அல்லது இப்பிரபஞ்சம் போன்றவையும் இருக்காது.

குறைபாடுகளை தன்னுள் கொண்டுள்ள அவர், அக்குறைபாடுகளை [அவரளவில்] அகற்றுவதற்காக [தனது சொந்த வழியில்] அவர் பொய் சொல்வததைத் தேர்வு செய்கின்றார். ஆனால் இம்முழு பிரபஞ்சத்தின் எஜமானனும், கேட்காமலேயே கொடுப்பவனுமாக அல்லாஹ் இருக்கும்போது , பின்னர் அவனுக்குப் பொய் சொல்ல வேண்டிய அவசியம் தான் என்ன?பொய் கூறுவது என்பது அவனுக்கு பொருந்துவது கூட இல்லை.

அல்லாஹ்(ஸுப்ஹ) தனது தூதர்களுக்கு அளிக்கி ன்ற அறிவுறுத்தல்களில் கூட, ஒருபோதும் பொய் கூறுவதில்லை. பொய் கூறுவது என்பது அவனுக்குப் பொருந்துவது கூட இல்லை, (அவன் அவ்வாறு) ஒருபோதும் செய்யவும் மாட்டான்.அவன் அனைத்துப் பொய்களுக்கும் அப்பாற்பட்டவன். கடந்த காலங்களில் நான் பலமுறை மேற்கோள் காட்டியதைப் போன்றே, நான் உங்களுக்கு வழங்கக்கூடிய ஒரு உதாரணம் ஹஸ்ரத் யூசுப்(அலை) அவர்களின் வரலாறுப் பற்றியது. அது, அவருக்காக ஒரு திட்டத்தை உருவாக்கி, ராஜாவின் கோப்பையை தனது சொந்த சகோதரனின் பையில் (வைப்பது பற்றி)அவருக்கு

அறிவுறுத்தியது எப்படி? அதனால் அரச காவலரின் வீரர்கள், அவரைக் கைது செய்வதற்கு, அதுவும் அந்நாட்டு சட்டத்தின் படி ஒரு காரணத்தைப் பெற முடிந்தது?,பிறகு அவர், அவரது ஒன்றுவிட்ட சகோதரர்களில் எவரும், 'அது அவரது சொந்த சகோதரர் யூசுஃப்(அலை) தான்' என்று சந்தேகிக்காத வண்ணம், புத்திசாலித்தனமாக அவருடன் தங்க வைக்க முடிந்தது? (என்பதைப் பற்றியதாகும்).அல்லாஹ் அல்-ஹக் (உண்மையாளன்) ஆவான். (அவன் எத்தகையவனென்றால்) அவனே சட்டத்தை நிலை நிறுத்தக்கூடியவனும், அவனுடைய சட்டங்களை எவ்வாறு பயன்படுத்தி துல்லியமான உண்மையை நிலைநிறுத்துவது என்பதையும் நன்கு அறிந்தவனாவான். (அவ்வாறு அவன் நிலை நிறுத்துகின்ற) அத்தகைய உண்மையானது சமூக நிலையில் மட்டுமல்லாது குடும்ப நிலையிலும் அமைதியை ஏற்படுத்தி விடும்;(மேலும்) அவன் தவறு செய்கின்றவர்களை, அவர்களின் தவறுகளை உணர வைத்துவிடவும் செய்கின்றான்.

வெளிப்படையாக மட்டுமே, ஹஸ்ரத் யூசுப்(அலை) ஒரு பொய்யைக் கூறியிருப்பதாகத் தோன்றலாம்,மேலும்,ஒரு நபர் இந்த கண்ணோட்டத்தில் இதைப் பார்த்தால்,அவர் “பார்! ஒரு தீர்க்கதரிசி கூட பொய் கூறியுள்ளார். அவரே ராஜாவின் கோப்பையை எடுத்து தனது சகோதரரின் பையில் வைத்து விட்டு குற்றமும் சாட்டியுள்ளார்!” என்பதாக நினைக்கலாம்.ஆனால் இது குறித்து அல்லாஹ் என்ன கூறுகின்றான்?

ۥ كَذَٰلِكَ كِدْنَا لِيُوسُفَ ۖ مَا كَانَ لِيَأْخُذَ أَخَاهُ فِى دِينِ ٱلْمَلِكِ إِلَّآ أَن يَشَآءَ ٱللَّهُ ۚ نَرْفَعُ دَرَجَٰتٍ مَّن نَّشَآءُ ۗ وَفَوْقَ كُلِّ ذِى عِلْمٍ عَلِيم

“கதாலிக கித்னா லி-யூசுஃப். மா கான லியஃ-ஹுத ‘அஹாஹு ஃபீ தீனில்-மலிகி‘ இல்லா ‘அய்-யஷா-அல்லாஹ். நர்ஃபஉ தர-ஜாதிம்-மன்-நஷா. வ ஃபவ்க குல்லிதீ இல்மின் அலீம்”.

இவ்வாறாக யூஸுஃபுக்காக நாம் ஒரு திட்டம் வகுத்து கொடுத்தோம்; அல்லாஹ்வின் நாட்டத்தினாலன்றி, அவர் தம் சகோதரரை எடுத்துக் கொள்ள அரசரின் சட்டப்படி இயலாதிருந்தார் - நாம் நாடியவர்களின் பதவிகளை நாம் உயர்த்துகின்றோம்;அறிவுடைய ஒவ்வொருவருக்கும் மேலான அறிந்த ஒருவன் இருக்கின்றான்! (ஸூரா அல் யூஸுஃப் 12:77)

ஆகவே, அல்லாஹ் அவனே உண்மையையும்,ஞானத்தையும் உள்ளடக்கியவனாவான்.. மனிதன், தன்னிடம் இருக்கும் குறைந்தபட்ச அறிவினால், அல்லாஹ்வின் செயல்களை [அவனது செயல்படுத்தும் வழிமுறைகளை] முழுமையாக புரிந்து கொள்ள முடியாது . [அல்லாஹ் இந்த அறிவினை தாமாகவே வழங்கியவர்க ளுக்கேத் தவிர] ..அடிக்கடி அவன் அல்லாஹ்வை குற்றம் சாட்டுகிறா ன். ஆனால் அல்லாஹ் வோ எல்லா குற்றங்குறைகளுக்கும், எல்லா பொய்களுக்கும் அப்பாற்பட்டவனாவான்..

மேற்கொண்டு நாம் , பெண்களின் பொய்களால் - அவர்கள து சொந்த மரியாதையையும், வி ருப்பத்தையும் பாதுகா ப்பதற்காக -யூசுப் நபி(அலை) அவர்கள் சிறையில் அடைக்கப்பட வேண்டிய து ஏற்பட்டது என்பதையும் பார்க்கிறோம்.அந்த நேரத்தில் ஆளும் மன்னர் , அல்-அஜீஸுடனும் குற்றம் சாட்டப்பட்ட அனைவரு டனும் சேர் ந்துகொண்டு ஓர் அப்பாவி மனித ரை (அதாவது ஹஸ்ரத் யூசுப்( அலை))ஐ கண்டனம் செய்தார். இதுவே அவர்களின் கொள்கையாகும் அதாவது இந்த முடிவை எடுப்பதற்கு அவர்களுக்கு உத்தரவிட்டது -( எதுவென்றால்)-பொய்களை அடிப்படையாகக் கொண்ட தொரு முடிவாகும்.. மக்கள் ( நடந்த) சம்பவத்தை மறந்துவிடுவார்கள். ஆனால் அல்லாஹ் என்ன செய்தான் ? அல்-ஹக்(உண்மையாளன்) ஆக இருப்பதா லும், அவனுடைய நபியின் கௌரவத்தை மீட்டெடுப்பதற்காகவும், பல ஆண்டுகளுக்கு பிறகும், அவன் யூசுப்(அலை) அவர்களை அக்கால ஆட்சியாளரின் அமைச்சராக ஏற்படுத்தி, பின்னர் யூசுப்( அலை) அவர்கள் "அல்-அஜீஸ்" ஆக

அழைக்கப்பட்டார்கள். எல்லோரும் அறிந்தபோது, அவரது எஜமானரின் மனைவி [அந்த (உண்மையினை வெளிக்) கொண்டு வ ந்த] - சுலைகாவே - பொய் கூறினார் என்ற உண்மை வெளிச்சத்திற்கு வந்தது,

மக்களின் பொய்களுக்குப் பின்னால் கணக்கில் எடு த்துக்கொள்ளக் கூடிய மற்றொரு காரணம் பயமாகும்.கிழக்கிலோ அல்லது மேற்கிலோ பெரும்பான்மையான பொய்கள் ,சுலேகாவின் நிலையைப் போ ன்றே, அவர்கள் அம்பலப்படுத்தப்பட்டுவிடுவார்கள் என்ற அச்சத்தி ன் காரணமாகவேப் பேசப்படுகின்றன.அவர்கள் தண்டனைக்கு அஞ்சுகிறார்கள் ..அதனாலாயே அவர்கள் பொய் கூறுகிறார்கள்.

ஒரு குழந்தை தவறு செய்ததாலோ அல்லது எவரேனும் ஒரு கொள்ளையோ அல்லது ஒரு குற்றமோ அல்லது (மக்கள் எதிர் கொள்ளக்கூடிய) வேறு எந்த சூழ்நிலையிலோ, இந்த சட்ட விதிகளு க்கு அஞ்சிக் கொண்டு பின்னர் அவர்கள் பொய் கூறுகிறார்கள்.அவர்கள் ஒரு கைதுசெய்தலை எதிர்கொள் வதற்கு அஞ்சுகிறார்கள்.ஆனால் அல்லாஹ்வின் தூதர் என்பவர் மக்களுக்கு அஞ்சுவதில்லை.அவர் தனது படைப்பாளனைப் போலவே தன்னையு ம் உண்மையின் மீது நிலைநிற்கி ன்றார்..அவர் இறை வழிகாட்டலைப் பின்பற்றுகி ன்றார். ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவரகள் அல்லாஹ்வின் கோபத்தை ஈர் க்கின்றதும் அவருக்கு அவமானத்தை ஏற்படுத்தக்கூடியதுமான ஒரு சட்டவிரோத மான செயலி ன் கவர்ச்சியைக் காட்டிலும் சிறைக்குச் செல்லவே விரும்பினார்கள்.

மக்கள் கணக்கில் எடு த்துக்கொள்ளப்படவில்லை என்றால் , அவர்கள் பொய் சொல்லமாட்டார்கள். இதற்கு உண்மையில் ஹம்தின் விஷயத்தோடு ஆழமான தொடர்புள்ளது. ஒரு கூட்டத்தின் போது நீங்கள் மிகவும் நல்ல வாசனை திரவியத்தை முகர்கிறீர்கள் என்று கூறி இந்த வாசனை -அத்தரோ

அல்லது வேறு ஏதாவது வாசனை திரவியமோ யாரிடமிருந்து வருகிறது என்று நீங்கள் கேட்கிறீர்கள்-பின்னர் அந்த நேரத்தில் (அங்கே இருக்கின்ற)மக்கள் தாங்கள்தான் அந்த வாசனை திரவியத்தை பூசிய வர்கள் என்று பொய்சொல்லிவிடலாம்.ஆனால் நீங்கள் ஏதாவது மோசமான வாசனையை முகர்கின்றீர்கள் என்று கூறுகின்றீர்களென்றால்,பிறகு அந்த கெட்ட வாசனை அவரிடமிருந்து வருகிறது என்று சொல்ல யாரும் பொய்சொல்லவோ [அல்லது அவ்விஷயத்தில் முன்வரவோ]மாட்டார்கள். அவர்களெல்லாம் (அதற்கு) அஞ்சுவதால் தான்! மாறாக [கெட்ட] வாசனை அவர்களிடமிருந்து வந்தாலும் கூட, அந்த துர்நாற்றத்தின் கேள்வி வரும்போது, துர்நாற்றம் அவர்களிடமிருந்து இல்லை என்று அவர்கள் பொய் கூறிவிடுவார்கள்.

எனவே பொய் என்பது 'ஹம்துடனும் அத்துடன் தீமையுடனும் ஆழமாக இணைக்கப்பட்டுள்ளது. அல்லாஹ்வுக்கும் அவனுடைய உண்மையான அடியார்களுக்கும், உண்மையின் மீது தங்களைத் தாங்களே நிலைநிறுத்திக் கொள்ளாதவர்களுக்கும், சமுதாயத்தில் தங்கள் கௌரவத்தைத் தக்கவைப்பதற்காக பொய்யான பாராட்டுக்களைத் தேடும் மற்றவர்களுக்கும் இடையிலான வேறுபாட்டை இது நிரூபிக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் மக்கள் புகழைப் பெற்றுக்கொள்வதற்காக பொய் சொல்கிறார்கள், மற்ற சந்தர்ப்பங்களில் மக்கள் தீமையிலிருந்து தப்பி த்துக்கொள்வதற்காக பொய் சொல்கிறார்கள். எல்லாவற்றின் அடுத்த கட்டமும் மதிப்பெண்களைத் தீர் மானிப்பது, அவர்கள் தண்டனையைப் பெறுவதற்கான நேரம் வரும்போது , பிறகு, ஒரு நபர் தான் செய்யாத ஒரு குற்றத்தை [ஒரு தீய செயலை ] செய்ததாக [அவர் குற்றமற்றவராக இருக்கின்ற நிலையில் ] பொய்கூறி விட முடியாது.. அங்கு அதறகு மாறாக, குற்றவாளியே, தான் நிரபராதி என்றும் அவர் கேள்விக்குரிய குற்றத்தைச் செய்யவில்லை என்று சொல்வதற்கு ம் தான் பொய் சொல்வார். அவன் செய்த தவறுகளுக்கு அவன் தண்டிக்கப்படுவான் என்று அவனுக்குத்

தெரியும் என்பதால் அவன் பொய் சொல்வான். நான் கூறியது போல் இந்த தலைப்பு தீர்க்கதரிசிகளின் உண்மைத்தன்மை யுடன் ஒரு தொடர்பை கொண்டுள்ளது. தீர்க்கதரிசிகள் வாதிக்கும்போது, அவர்கள் தங்கள் மக்களிடமிருந்து பெரும் தண்டனைகளைப் பெறுகிறார்கள், அங்கு இந்த மக்கள் அவர்களது கௌரவத்தைத் த கர்க்கிறார்கள்.சமூகமானது அவர்கள்( தூதர்கள்) வாதிப்பதற்கு முன் னால் அவர்களுக்குக் கொடுத்த வந்த அவர்களின் உண்மையான மதிப்பையும், மரியாதைகளையும் நிராகரித்து விடுகின்றது.

அல்லாஹ்வின் அடியார் , அல்லாஹ்வின் தூதர் வெறும் புகழுக்காக அல்லது தண்ட னையிலிருந்து தப்பி த்துக் கொள்ள அல்லது பேராசையின் காரணமாக பொய் கூற க் கூடும் என் று நீங்கள் நம்புகி ன்றீர்களா? ஆயினும் அவர்களின் வாதங்களுக்கு முன்பே , மக்கள் அவர்கள து பெரும் மதிப்பி ற்கு சாட்சியமளித்தும், ஸாலிஹ்(அலை) அவர்களிடம் அவர்களுடைய மக்கள் ," நாங்கள் எங்கள் நம்பிக்கையை உங்களிடத்தில் வைத்திருந்தோம்" என்று கூறியது போன்றும், அவர்கள் மீது நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

ஆகவே, இது எல்லா நபிமார்களுக்கும் பொருந்தும். அது போன்றே வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களுக்கும் அவ்வாறே பொருந்தும் . ஹஸ்ரத் ஸூஃபி அஹ்மத் ஜான் சாஹிப் அன்னாரிடம், “நாங்கள் பலகீனமாக உள்ளோம். நாங்கள் எங்கள் பார்வைகளை உங்கள் மீது வைத்திருக்கிறோம். அல்லாஹ்வின் காரணமாக நீங்கள் உங்களை மஸீஹ் என் று அறிவி யுங்கள்” என கூறியது போன்று மக்கள் அவர்கள் மீது மிகப்பெரிய நம்பிக்கை வைத்திருந்தார்கள்.ஆக, ஒருவன் பாரட்டைப் பெறுவதற்காகவோ அல்லது தனது பேராசையை பூர்த்தி செய்யக்கூடிய செல்வத்தை அடைய வேண்டியோ பொய் கூறுகின்றான்.ஆனால், ஒரு மனிதர் வாதம் செய் யும்போது அவருடைய புகழுக்கு பங்கம் ஏற்படுகிறது ,அங்கே உடைமைகளை இழக்க நேரிடுகிறது,மேலும் அவர் தமது வாதத்தி ன் காரணமாக துன்புறுத்தலுக்கு

உள்ளாகிறார்.அவர் குற்றச்செயலில் ஈடுபட்டதாலோ , ரகசிய திட்டம் தீட்டியதாலோ, மோசடி செய்ததாலோ அவருக்கு இத்தண்டனை கிடைக்கப்பெறவில்லை மாறாக அவர் உண்மையாளராக இருக்கின்றார்(என்பதனாலாகும்).அதுபற்றி அவர் பொய் கூறுவாரேயானால் அவர் புத்தி சுவாதீனம் இல்லாதவராக வே இருக்க வேண்டும். (வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், உண்மையை அடிப்படையாக கொண்ட நிலையில் எந்த மனிதர், தான் துன்புறுத்தப்படுவதையும் இகழப்படுவதையும் விரும்புவார் ?) அம்மாதிரியான மனிதர் புகழ், கண்ணியம், செல்வச் செழிப்பு போன்ற எல்லாம் இருந்த போதிலும் எது நடந்தாலும் (எதை எதிர் கொண்டாலும்) அவர் தன் வாதத்தை வெளிப்படுத்துவார் . (காரணம், அவர் அல்லாஹ்வின் புறமிருந்து வந்துள்ளதால்),எனவே நீங்கள் அவரை பொய்யர் என்று அழைப்பீர்களா?

நான் ரீயூனியன் தீவில் தங்கி இருந்த போது நடந்த ஒரு உண்மை நிகழ்வை உங்களிடம் கூறுகிறேன் ,நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தி ன் உள்ளூர் கொள்கை பரப்புனராக (மொரீஷியஸ் மற்றும் சுற்றியுள்ள தீவுகளில் பணியாற்றிய போது) , (தப்லீக்)பிரச்சாரம் செய்து கொண்டிருந்தேன்.( அப்போது) நான் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)-ஐ மிகக் கடுமையா க எதிர்த்து வந்த ஒரு மௌலவியை சந்தித்தேன்.அவரது ஜமாஅத்தினரின் முன்னிலையில் என்னுடன் பேசும் போது, ஹஸ்ரத் மஸீஹ் மஊத்(அலை) அவர்கள் செய்த

வாதங்கள் பற்றி நிறைய பேசினார் , ஆனால் அவை எல்லாம் ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்களுக்கு எதிராக கிறிஸ்தவர்கள் எழுப்பிய அதே ஆட்சேபனைகள் என்பதை அவர் அறிந்திருக்கவில்லை.கிறிஸ்தவர்கள் ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்களை பற்றி கூறுகிறார்கள் , நவூது பில்லாஹ் மின் தாலிக். அன்னார் தனது பணியை சிறிய பொய்யை கொண்டு துவக்கினார்கள் , அதன் பிறகு இரண்டாம் ,மூன்றாம் என பொய் கூறிக்கொண்டே சென்றார்கள். முதலில் அவர் மூஸாவை விட மேலானவர் அல்ல என்றும் அவரது வருகை

மக்கா மாநகர மக்களுக்கு மட்டுமானது என்றார் ; பிறகு,அதற்கு மாற்றமாக , அவர் த ன்னுடைய உறவினரை எச்சரிக்க மட்டுமே வந்ததாக வும் கூறினார். அதன் பின்னர் வேதத்தை உடைய மக்களுக்காக வந்ததாக அவரது வாதம் மாறியது. அவரது வாதம் அதிகரித்துக்கொண்டே சென்றது , இறுதியில் அவர்,தான் முழு மனித குலத்திற்காகவும் வருகை தந்ததாக வாதித்தார். ஆகவே அன்னார் பொய் கூறினார்கள் என்றும் சிறிது சிறிதாக அவர்களது பொய் அதிகரித்துக் கொண்டே சென்றது என்றும் கிறிஸ்தவர்கள் கூறுகின்றனர்.

ஆகவே அம்மௌலவிக்கு மார்க்க வரலாறு பற்றிய போதிய ஞானம் இல்லை. புத்தகங்களில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதையும் அவர் அறிந்திருக்க வில்லை.ஹஸ்ரத் மஸிஹ் மவூத் (அலை) அவர்கள் முதலில் தன்னை தூதர் என்றார்கள் , பிறகு தன்னை மஹ்தி என்று அறிவித்தார்கள் , அதன் பிறகு அவர்கள் எந்த ஈசா (அலை)ஐ எதிர்பார்த்து காத்திருக்கிறார்களோ தானே அந்த இரண்டாவது ஈசா -என்று பிரகடனம் செய்தார்கள் ; “நான் கிருஷ்ணர் ஆக இருக்கிறேன் ” போன்றவற்றை மட்டும் அவர் படித்துள்ளார்.எனவே இந்த மௌலவி தன் ஜமாஅத் மக்களிடம் ,”பாருங்கள் மிர்ஸா குலாம் அஹமத்(அலை) எத்தகைய பொய்யராக உள்ளார் ?!” என்றெல்லாம் கூறினார்.

நான் மௌலவியிடம் கூறினேன்: நான் உங்களை கடை வீதிக்கு அழைத்து சென்று யாரோ என் பொருளை திருடிவிட்டதாக அறிவிப்பு செய்தால், திருடியவனுக்கு காலணியால் தலையில் 100 அடிகள் கிடைக்கும் என இருந்தால், (குற்றம் செய்யாதிருந்தாலும்) நீங்கள் தான் குற்றவாளி என ஒப்புக்கொள்வீர்களா? ஆமாம், நான் தான் அதை திருடினேன் என்று பொய்யாக வாதிப்பீர்களா? உண்மையான திருடன் கூட தண்டனைக்கு அஞ்சி தானே திருடியதாக கூற மாட்டான் என நான் அவரிடம் கூறினேன். பல சந்தர்ப்பங்களிலும், மக்கள் தண்டணையிலிருந்து தப்பி த்துக் கொள்வதற்காக

பொய் கூறுவர் என அவரிடம் தெளிவுபடுத்தினேன், ஆனால் (வாக்களிக்கப்பட்ட மஸீஹ்-ன் விஷயத்தில்) மக்கள் உங்களை துன்புறுத்துவார்கள் என்று தெளிவாக அறிந்திருக்கும் போது, நீங்கள் ஏன் பொய் கூற வேண்டும்?

இது தவிர, [வாக்களிக்கப்பட்ட மஸீஹ்] அவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக தமது வாதத்தை வைத்தது பற்றி விவாதிக்கும் போது ,நான் அவரிடம் கூறினேன்: [இ வற்றையெல்லாம்] சிந்தனை செய்கின்ற சிறிய அளவிலான திறன் கூட உங்களிடம் இல்லையா ? ஹஸ்ரத் மஸீஹ் மவூதின் அடையாளங்களை நீங்கள் மனதில் ஆட்சேபனைகளுடன் பார்க்கிறீர்கள்.அவர்கள் தன்னை இறைவனின் தூதர் என் ற வாதத்தை வைக்கும் போது , ஏற்கெனவே முஸ்லிம்கள் அவரது எதிரியாக இருந்தனர். அவர்கள் தன்னை மஹ்தி என வாதிடும் போது அம்முஸ்லிம்களால் துன்புறுத்தப்பட்டார்கள்.(அந்நிலையில்) மீண்டும் அவர் ஒரு பொய் வாதமாக 'இறைவனுக்கு மகன் இல்லை' என்றும், இறைவனது மகன் என் ற தகுதி யை அளித்துள்ள கிறிஸ்தவர்கள், இறைவனது மகனாக நம்பிக்கை கொண்டுள்ள-இயேசுவை- 'இறந்து விட்டார்கள்' என்ற வாதத்தை முன்வைப்பார் என்று நினைக்கின்றீர்களா?

இப்படிப்பட்ட இந்த பிரகடனத்தால், அவர்கள் பொதுவாக ஆங்கிலேயர் மற்றும் கிறிஸ்தவர்களின் பகைமை யை பெற்றுக்கொண்டதோடு,அவர்கள் தன்னை 'கிருஷ்ணர்' எனவும் அறிவி ப்பு செய்தார்கள் .அவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக எல்லாவற்றையும் பற்றி பொய் சொல்லி இருப்பாரா ? மீண்டும் பொய்யை தொடர்ந்து இருப்பாரா? (இது ஒரு வாதம் ஆகும்). எல்லோரும் அவர்களுடைய எதிரிகளாய் மாறி அவருக்கு துன்புறுத்தியிருக்க, அவர் கூறுவது எல்லாம் பொய் எனும் பட்சத்தில், தனது பொய்யில் நிலையாய் நின்று பண்டிட் லேக்ராமை எதிர்ப்பதன் மூலம் ஆரியர்களையும் எதிரியாக்கிக் கொள்வாரா ? அத்துடனும் அவர்கள் நின்று விடவில்லை!(மாறாக) சீக்கியர்களின் பாபா நானக் ஒரு முஸ்லிம் என்றும் அறிக்கை வெளியிட்டார்கள்.

இந்நபியின் உண்மையை கண்டறியக்கூடிய சிந்தனைத்திறன் கொஞ்சம் கூட உங்களிடம் இல்லையா ? என நான் மௌலவியிடம் கேட்டேன். பொய்களால் குற்றம் சாட்டப்படுவதையும் , மக்கள் அவருடைய எதிரிகளாக மாறி அவரை எதிர்ப்பதையும் அவர் விரும்பியிருப்பாரா ? அவர்களால் அவமானப்படுத்தப்படுவதையும், அனைத்து வகையான முட்டாள் தனமான கேலி கூத்துகளினால் அவரது மரியாதை மற்றும் கண்ணியம் சிதைக்கப் படுவதையும் மேலும் தன் உயிருக்கே ஆபத்து ஏற்படுவதையும் அவர் விரும்பியிருப்பாரா? திருடு, போன்ற குற்றச்செயல்களை செய்பவர்கள்,

கொடூரமான தண்டனைகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள பொய் சொல்கிறார்கள். ஆனால் [ஹஸ்ரத் மஸிஹ் மவூத் (அலை)) அவர்களைப் பொறுத்தவரை அவர்களது உயிரும்,அவர்களது குடும்பத்தினரின் உயிர்களும் அபாயத்தில் இ ருந்தன,அங்கே அவர்களைக் கொல்ல வும் முயன்றனர்-அதோடு அன்னாரது இயற்கை மரணத்தையும் விமர்சிக்கும் விதமாக அவர்கள் 'கழிவறையில் இறந்தார்கள் '.(நவீன கழிப்பறைகளை விட வும் மோசமான கழிப்பறையில்) என்றும் கூறுகின்றனர். அவர்களை விமர்சித்தவர்களின்

வயிற்றில் என்ன இருக்கிறது (அதாவது உடலில் குறிப்பாக சிறுநீர் பையிலும், மலக்குடலிலும்) முத்துக்களும், வைரங்களுமா? அங்கு கழிவுகள் இல்லையா? அவர்கள் இறந்த பின் , நாம் அவர்களை குளிப்பாட்டுகிறோம், எல்லா வாயுவையும் அகற்றி, அவர்களின் வயிற்றை அழுத்தி எவற்றை

அகற்றுகிறோம்? அசுத்தம் / கழிவுகள் அல்லாது முத்துக்களையும் வைரங்களையுமா (அகற்றுகி ன்றோம்)?அவர்கள் ( இவ்வாறான) எல்லா வகையான குற்றச்சாட்டுகளையும் அன்னார் மீது சுமத்துவதோடல்லாமல், அன்னார் அபின் புகைத்ததாகவும் கூட கூறியுள்ளார்கள்!

கவனியுங்கள்! ஒரு தூதர் அல்லாஹ்விடமிருந்து வரும்போது , அவருடைய வாழ்க்கை அவ்வளவு எளிதானதல்ல; அவர் பல சோதனைகளையும் கடந்து செல்கிறார் . இன்று , இந்த நூற்றாண்டி ன் வரலாற்றில் அல்லாஹ்( swt) இந்த தாழ்மையான அடியானை எழுப்பியுள்ள இடத்தில் மீண்டும் அதே(வரலாறு) திரும்புகிறது ;அதே கேள்விகளை நான் அஹ்மதிகளிடமிருந்தும் பெற்றுள்ளேன். இப்போது நிலைமை என்னவென்றால், முன்பு நான் மஸீஹே மவூத்(அலை) அவர்களுக்கு ஆதரவாக மற்றவர்களுக்கு விளக்கியிருந்ததை நான் இவர்களுக்கும் புரிய வைக்க வேண்டியுள்ளது , வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு கிடைக்கப்பெற்றிருந்த அதே விரும்பத்தகாத , பழிச்சொற்கள் என் மீதும் சாட்டப்பட்டுள்ளது;(இன்று வரை தொடர் கின்றது). ஒவ்வொரு முறை தூதர் வரும்போது ம் நிலைமை ஒத்ததாக வே இருக்கும் என்பதை இன்று நான் அஹ்மதிகளுக்கு புரிய வைக்க வேண்டி யுள்ளது. ஆனால் இந்த வாதங்களை அவர்களிடம் உறுதியாக நிலை பெற செய் வதற்கும், அதன் மூலம் அவர்களது கண்களில் உள்ள அனைத்து திரைகளும் அகற்றப்படுவதற்கும் நான் எந்த முரசு கொண்டு கொட்டுவேன்?

இன்ஷா-அல்லாஹ், இதனையே அடுத்த வாரமும் தொடருவேன். எப்போதும், உண்மையை வெளிக்கொணரவும், சத்தியத்தை ஏற்றுக்கொள்வதற்கும், அல்லாஹ்வின் மகத்துவத்தையும், இந்த நூற்றாண்டில் அவன் வெளிப்படுத்தியு ள்ள பல்வேறு அடையாளங்களையும் வெளிப்பாடுகளையும் ஆழ்ந்து சிந்திப்பதற்கும் உரிய தவ்ஃபீக் கையும், ஹிதாயாவையும் அல்லாஹ் உங்களுக்கு வழங்குவானாக!. இன்ஷா-அல்லாஹ் , ஆமீன்.!

**Editing & Publishing are done by**
***AMIR***
***JAMAAT - UL-SAHIH-AL-ISLAM***
***TAMIL NADU***
**Ph No: 917502272774**

**Translated by:**

**S.H. Faisal**